திலேயே சிட்டி பஸ்களை எல்லாம் ரீப்ளேஸ் செய்கிறோம். இந்த பஸ்களை எல்லாம் எப்போது, எத்தனை ஆண்டுகள் கழித்து ரீப்ளேஸ் செய்யப்படுகிறது என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்கிறேன்.

தனியார் பஸ் நிறுவனங்களுக்கான பஸ் மார்க்கங்கள்

* 212 கேள்வி.—திரு. ப. உ. சண்முகம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சர்க்கார் துரித பஸ்கள் போகும் பாதையில் தனியார் நடத்தும் துரித பஸ்கள் குறிப்பிட்ட மைல்கள்தான் போகலாம் என்று விதி உள்ளதா?

THE HON. SRI R. VENKATARAMAN: No. Instructions have, however, been issued that private operators can ply buses on sectors of routes run by the State Transport Undertaking up to 120 kilometres only, but such restriction does not operate against the existing permits already issued and the renewal thereof.

SRI C. CHIRANJEEVULU NAIDU: It is stated that in the notified routes private operators will not be allowed to run even if it touches one furlong of the notified route. Will the Government consider the desirability of relaxing the rule allowing private operators also to run buses along these routes?

THE HON. SRI R. VENKATARAMAN: There is no question of relaxing the rule. I would like to explain this matter. The Supreme Court held that no private operator could run within any part of a stage operated by a nationalized route. We have changed the notification and issued a fresh notification. In the original notification we have said "to the total exclusion of other operators." In the present notification we have said "to the partial exclusion of operators."

சைக்கிள் ரிக்ஷாக்கள்

* 213 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சைக்கிள் ரிக்ஷா ஓட்டுவதற்கான புதிய லைசென்ஸ்கள் வழங்கப்படுகின்றனவா?

(இ) ஆம் எனில், 1964–65-ல் எத்தனை லைசென்ஸ்கள் வழங்கப்பட்டுள்ளன மாவட்டவாரியாக?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, except in some districts; and

(*b*) A statement [a] is laid on the Table of the House.

---

[a] Printed as Appendix II on page 774–775

திரு. கே. ஏ. மதியழகன் : இங்கு வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் சென்னை நகரத்தில் 1964-65-ல் புதியதாக ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு லைசென்சு கொடுக்கப்படவில்லை என்று இருக்கிறது. இந்த நடைமுறை ஆண்டிலாவது புதியதாக லைசென்சு கொடுக்கப்படும் விஷயம் மறுபரிசீலனை செய்யப்பட்டு, ஏதேனும் வழங்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சிலர், "நல்ல வண்டிகள் வைத்திருக்கிறோம், மூன்றாண்டுகள் கூட ஓடவில்லை. இவற்றின் லைசென்சை நீடித்துக் கொடுக்கவேண்டும்" என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளுக்கு இணங்க நல்ல வண்டிகளாக வைத்திருப்பவர்களுக்கு லைசென்சு கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிய வண்டிகளுக்கு லைசென்சு கொடுப்பதில்லை என்றே முடிவு செய்திருக்கிறோம்.

அரசாங்க போக்குவரத்து பஸ்ஸுக்கு தீயால் ஏற்பட்ட சேதம்

* 214 கேள்வி.—திரு. இராம அரங்கண்ணல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதி அன்று சென்னை இராயபுரத்தில் அரசாங்க பஸ் ஒன்று தீப்பிடித்துக்கொண்டு சேதம் ஏற்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Production in Powerlooms of cloth reserved for handlooms.

* 215 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that certain varieties of cloth reserved for the exclusive production in handlooms have been permitted to be produced in powerlooms also;

(b) whether the powerlooms are also permitted to use hank yarns used in handlooms; and

(c) if so, the reasons therefor?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No;

(b) No permission is required for using hank yarn by powerlooms; and

(c) Does not arise.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஆலையில் நூற்கும் நூல்கள் இரண்டு வகைகளாக—ஒன்று சிட்டமாகவும், மற்றொன்று கோனாகவும்—செய்கிறார்கள். கைத்தறிகளுக்குச் சிட்டங்கள்தான் பயன்படும். ஆலைகளில் நெய்யப்படுகிற ஜவுளிகளுக்கு கோன்கள் பயன்படும்.